அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண்.24/2016
தேதி. 25.01.2016

சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனர் - தலைவர் **ஆர்.சரத்குமார்** எம்.எல்.ஏ அவர்களின்
குடியரசு தின வாழ்த்து

*உலகெங்கிலும் உள்ள ஜனநாயக நாடுகளுள் தலைசிறந்து விளங்கும் இந்தியத் திருநாட்டின் குடியரசு தினம் நாடெங்கிலும் விமர்சையாக கொண்டாடப்படுகிறது. பல்வேறு மத, இன, மொழி, கலாச்சார வேறுபாடுகள் நிறைந்த நமது தேச மக்களை அன்புச் சங்கிலியால் பிணைத்திருப்பது மக்களாட்சித் தத்துவத்தின் மகிமை சொல்லும் குடியரசுதான் என்றால் மிகையாகாது.*

*இன்று உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடு, வல்லரசு என்றும் பரிணாமத்தை நோக்கி வளர்ந்துவரும் நாடு, உலகின் எந்த ஒரு நாட்டின் சமூக, பொருளாதார மாற்றத்திலும் இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இருக்காது என்ற நிலை என்னும் பல்வேறு பெருமைகளுக்கு அடித்தளம் சுதந்திரப் போராட்டத்தில் தமது இன்னுயிரை ஈந்த லட்சக்கணக்கான வர்களின் தியாகம் தான் என்பதும் நாம் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.*

*தியாக வரலாறு கொண்ட இந்திய திருநாட்டில், வளர்ச்சிக்கான திசையை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தாலும், வழியில் சூழ்ந்திருக்கும் ஏராளமான தடைகளையும், சவால்களையும் எதிர்கொண்டு வெற்றிபெற வேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். அத்தகைய தடைகளை முறியடித்து வல்லரசுத் திருநாடாக நம் தேசம் உருமாற அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்பட வேண்டும் என்று இக்குடியரசுத் திருநாளில் அனைவரும் உறுதியேற்போம்.*

*இவ்வினிய குடியரசு நன்னாளில் இந்தியத் திருநாட்டின் சகோதர சகோதரிகள் அனைவருக்கும், உலகெங்கும் வாழும் இந்தியர்களுக்கும் சமத்துவ மக்கள் கட்சி சார்பில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*நன்றி, வணக்கம்,*
*உழைப்பவரே உயர்ந்தவர்*
*என்றும் அன்புடன்,,*

ஆர்.சரத்குமார் எம்.எல்.ஏ
தலைவர்